<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

OS 113/2019

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 04.08.2026

**Pw1 (சரஸ்வதி)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில்)</u>**

நான் தாவாவிற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தேன் என்றால் சரி. வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ள விவரங்கள் சரியானது தான். அதில் சொல்லப்பட்டுள்ள செக்குபந்தி சரியானது என்றால் சரிதான். தாவாவில் சொல்லியுள்ள செக்குபந்தி சரியானதா என்றால் அதில் தவறு இருந்தது, அதை திருத்தம் செய்துவிட்டோம். நான் அனுப்பிய அறிவிப்பிற்கு (வாசாஆ 3) 1 ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு(வாசாஆ 5) அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி பதிலறிவிப்பில் செக்குபந்தி விவரங்கள் தவறானது என்று சொல்லியிருந்தார் என்றால் சரி. அதை தெரிந்து கொண்டு தான் அசல் வழக்கில் சரியான செக்குபந்தி குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதை காட்ட வாசாஆ 1 அடமான பத்திரம் தான் ஆவணம். வாசாஆ 1 என் தகப்பனார் அவர் தம்பி சேமலைநாடாருக்கு எழுதி கொடுதத அடமானம் என்றால் சரிதான். வாசாஆ 1 ல் கண்டுள்ள செக்குபந்தி சரியானவை என நான் சொல்கிறேன் என்றால் சரிதான். வாசாஆ 1 ல் சேமலை நாடார் வீட்டிற்கு வடக்கு என சொல்லியிருப்பது சரியானது தான். சேமலை நாடார் வீடு அமைந்துள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தென்வடல் காங்கேயம்-சென்னிமலை ரோட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. கிழமேல் மண் ரோட்டிற்கான சர்வே எண் தெரியுமா என்றால தெரியாது. தாவா சொத்திற்கு கிழபுறம் ராமாசாமி நாடார் சொத்து உள்ளது. ராமசாமி நாடார் சொத்தின் சர்வே எண்ணும் எனக்கு தெரியாது. நான் திருச்சியில் இருப்பதால் அந்த சர்வே எண் எனக்கு தெரியாது. நான் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரையில் சொல்லியுள்ள செக்குபந்தி விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல. வாசாஆ 1 ல் சொல்லப்பட்டுள்ள செக்குபந்தியும் தவறு என்றும் வாசாஆ 1 ல் கண்டுள்ள சொத்து வேறு இடத்தில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 1 ல் கண்டுள்ள சொத்து எனக்கு பாத்தியதை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனுபவித்து வரும் சொத்திற்கு அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா

பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் என் தகப்பனாரின் பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், 1 ம் பிரதிவாதியின் பெயரில் தனிப்பட்ட முறையில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் 1 ம் பிரதிவாதியும் அவரின் குடும்பத்தாரும் அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 2 ல் 1 ம் பிரதிவாதிக்கு தான் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கும் அவரின் சகோதரருக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களை என் தகப்பனாரும் அவரின் சகோதரர் மற்றும் வாரிசுகளும் சேர்ந்து விற்பனை செய்து விட்டனர் என்றால் சரியல்ல. அவ்வாறு விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. என் அப்பாவின் சகோதரருக்கு பாத்தியப்பட்ட சொத்துககள் அவரின் வாரிசுகள் விற்பனைசெய்து விட்டதாக கூறுகிறார். நான் சொல்வதுபோல் சேமலை நாடாருக்கு மட்டும பாத்தியப்பட்ட சொத்துககள் அல்ல என்றும் என் தகப்பனாருக்கும் சொத்துக்கள் பாத்தியம் என்றும் அவரும் விற்பனை செய்து விட்டார் என்றால் சரியல்ல. சொத்தை கிரயம் பெற்றவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சுமார் 5 செண்ட் நிலம். அது செண்ட் எவ்வளவு மதிப்பு பெறும் என்றால் ரூ.2000-3000 மதிப்பு பெறும். இந்த வழக்கு தாக்கல் செய்ய வழக்கு முலம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரண இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.08.04 04:41:51 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS